அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல.309

அரசாங்க நிருவாக அமை
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு.7
25 ஒக்டோபர், 1985.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் யாவர்க்கும்.

அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு விசேட முற்பணம்-1986

பின்வரும் உத்தியோகத்தர்களுக்கு 1986 ஆம் ஆண்டில் 500/- ரூபா வுக்கு மேற்படாத விசேட முற்பணமொன்றைக் கொடுப்பதென முடிவு செய்யப் பட்டுள்ளது.

(அ) பதவி நிலைத் தரங்களைச் சேராத எல்லா நிரந்தர அரசாங்க உத்தியோகத்தர்களும் இந்த விசேட முற்பணத்தைப் பெறத் தகுதி யுடையவர்கள். பதவி நிலைத் தரத்தைச் சேர்ந்த உத்தியோகத் தர் எனப்படுபவர் வருடமொன்றுக்கு 13,800/-ரூபா அல்லது அதற்கு மேற்பட்ட புதிய திரட்டிய ஆரம்பச் சம்பளத்தையுடைய வரும் வருடாந்த சம்பள ஏற்றமாக 480/- ரூபாவைப் பெறுப வருமான ஒரு அரசாங்க உத்தியோகத்தராவர்.

(ஆ) முற்பணம் வழங்கப்படும் திகதிக்கு உடனடுத்து முன்பாக 3 மாதங்களுக்குக் குறையாதவாறு தொடர்ச்சியான சேவையையுடையவரும், பதவிநிலைத் தரத்தைச் சேராதவரும் தற்காலிக அல்லது அமய அடிப்படையில் சேவை புரிபவரும் கடன் திருப்பிப் பெறப்படும் முழுக் காலப் பகுதி(உதா:-குறைந்தது 1986 டிசம்பர் இறுதிவரையில் தொடர்ந்து சேவை புரிவார் என்பதற்கான உறுதியுடையவர்களுமான அரசாங்க உத்தியோகத்தர் இந்த விசேட முற்பணத்தைப் பெறத் தகுதியுடையவராவர்.

02. 1977ஆம், 1978ஆம், 1979ஆம், 1980ஆம், 1981ஆம், 1982ஆம், 1983ஆம், 1984ஆம், 1985ஆம் ஆண்டுகளிற் தாம் பெற்ற ஏதும் விசேட வங்கிக் கடன்கள் தொடர்பில் தவணைப் பணங்களைச் செலுத்தத் தவறிய ஓர் அரசாங்க உத்தியோகத்தர் 1986ஆம் ஆண்டுக்கான இவ்விசேட முற்பணத்தைப் பெறத் தகுதி உடையவராகார்.

03. இம்முற்பணம் 01.01.1986ஆந் திகதிக்கும் 28.02.1986ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் கொடுத்து முடிக்கப்படுதல் வேண்டும். 28.02.1986 ஆம் திகதிக்குப் பின்னர் எவ்விதக் கொடுப்பனவும் செய்யப்படுதலாகாது.

04. இம்முற்பணம் "அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு முற்பணக் கணக்கு-பி" என்பதில் பற்று வைக்கப்படுதல் வேண்டும்.

05. இம்முற்பணம் ஆண்டொன்றுக்குப் 13 சதவீதப்படி சமனுக்கிய மாதாந்த வட்டியுடன் சேர்ந்து, சம தொகையைக் கொண்ட 10 மாதாந்த தவணைக் கட்டணங்களில் அறவிடப்படுதல் வேண்டும். 500/-ரூபா முற்பணத்துக்குரிய சமனுக்கிய மாதாந்த வட்டி 3 ரூபா 00 சதம் என நிர்ணயிக்கப் பெற்றுள்ளது. 500/- ரூபாவுக்குக் குறைந்த முற்பணங்களின் தொடர்பில் விகிதாசாரப்படியான சமனுக்கிய மாதாந்த வட்டி அறவிடப்படுதல் வேண்டும்.

06. 238 ஆம் நிதி ஒழுங்குவிதி, தாபனக் கோவையின் XXV ஆம் அத்தியாயத்தின் 3ஆம் பிரிவு என்பனவற்றிற் குறித்துரைக்கப்பட்டுள்ள 40 சதவீத அல்லது 33 1/3 சதவீத எல்லையிலிருந்து இம் முற்பணம் பேரிற் செய்யப்படும் அறவிடுதல்களுக்கு விலக்களிக்கப் பெற்றுள்ளது.

07. முதல் சார் தவணைக்கட்டண அறவிடுதல்கள், இம்முற்பணம் கொடுத்தற்குக் காரணமாகிய "அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு முற்பணக் கணக்கு பி" என்பதில் வரவு வைக்கப்படுதல் வேண்டும். வட்டிசார் அறவிடுதல்கள் அரசிறைத் தலைப்பு-5, கிடைக்கப் பெற்ற வாடகை, வட்டி, இலாபம், பங்கிலாபம், உபதலைப்பு 2 வட்டி, விடயம் 4: பிற என்பதற்கு வரவு வைக்கப்பட்டு புறம்பாகக் கணக்கிடப்படுதல் வேண்டும்.

08. "அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு முற்பணக் கணக்கு" என்பதிலிருந்து கொடுக்கற்பாலதாகிய விழா முற்பணங்களோடு அல்லது ஏனைய முற்பணங்களோடு அல்லது 1977ஆம், 1978ஆம், 1979ஆம் ஆண்டுகளிற் வழங்கப் பெற்ற விசேட வங்கிக் கடன்களோடு இவ்வறவிடுதல்களைக் கலத்தலாகாது.

09. கொடுப்பனவையும், மற்றும் முதல்சார் தவணைக்கட்டணங்கள் சமமாக்கி மாதாந்த வட்டி என்பவற்றின் அறவீட்டையும் பதிவதற்கு படிவம் சிசி 10 என்பதிலான புறம்பான பதிவேடொன்று வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

10. அவசியமானவிடத்து, 503ஆம் நிதி ஒழுங்கு விதியின் பிரகாரமும் 28.0 85ஆம் தேதியிட்ட 31ஆம் இலக்கத் திறைசேரி சுற்றறிவிப்பு நிருபத்தின் பிரகாரமும் முற்பணக் கணக்கின் எல்லைகளை மீளாய்வதற்குத் திணைக்களத் தலைவர்கள் நடவடிக்கையெடுத்தல் வேண்டும்.

11. இவ்விசேட முற்பணம் கொடுக்கப்படுவது காரணமாக 1986ஆம் ஆண்டி விசேட வங்கி முற்பணம் கொடுக்கப்படமாட்டாது.

12. இடமாற்றஞ் செய்யப்படும் அரசாங்க உத்தியோகத்தர் ஒருவர் சம்பந்தமாக, முற்பணக் கணக்கிலிருந்து கொடுக்கப்படும் முற்பணங்களின் அறவிடுதல்கள் தொடர்பில் வழமையாகப் பின்பற்றப்படும் நடைமுறை கடைப்பிடிக்கப்படுதல் வேண்டும். அதாவது குறித்த முற்பணத்தின் நிலுவை மீதியை அவ்வுத்தியோகத்தரை விடுவிக்குந் திணைக்களத்திற்கு அவ்வுத்தியோகத்தர் மாற்றப்பட்டுள்ள திணைக்களம் அதன் "அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு முற்பணக் கணக்கு-பி" என்பதிற் பற்று வைப்பதன் மூலம் கொடுத்தல் வேண்டும். அதன் பின் தவணைக் கட்டணங்களின் அறவிடுதல்கள் தொடர்ந்து செய்யப்படுவதுடன் எச் சந்தர்ப்பத்திலும் 1986 திசெம்பர் மாத இறுதியளவில் அறவிடுதல்கள் செய்து முடிக்கப்படுகின்றனவென்பதை உறுதிப்படுத்தலும் வேண்டும்.

13. இத் திட்டத்தின் கீழ் முற்பணமொன்றைப் பெற்ற பணியாளரொருவர் பணியில்லாது போகுமிடத்து, அத்தகைய பணியாளரிடமிருந்து வருமதியாகவிருக்கின்ற (சமனாக்கிய வட்டியுட்பட) நிலுவையாகவுள்ள முற்பண மீதி அவரின் ஓய்வூதியம்/ ஏற்பாட்டு நிதியம்/ஏமப்பணம்/பணிக்கொடை அல்லது அவருக்குக் கொடுக்கற்பாலதான வேறேதேனும் பணத்திலிருந்து அறவிடப்படுகின்றதென்பதையும் அவர் ஒரு தற்காலிகப் பணியாளராயின், அவரின் கடைசி மாதச் சம்பளத்திலிருந்து அறவிடப்படுகின்றதென்பதையும் சம்பளத் தாபனக் கூறுகள் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

14. இந்த முற்பணமானது 03-06-1985 ஆம் திகதியையும் 1290ஆம் இலக்கத்தையுங் கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் [illegible] முற்பணத்துக்கு/கடன்களுக்கு மேலதிகமாக வழங்கப்படுகின்றது.

15. 25-09-1985 ஆம் திகதியையும் 268-ஆம் இலக்கத்தையும் கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையுடன் இணைக்கப்பட்டிருந்த மாதிரி விண்ணப்பப் படிவத்தைத் தேவைக்கேற்பத் திருத்துவதன் மூலம் இந்த அறிவித்தலுக்கான விண்ணப்பப் படிவங்களை வழங்கும் அதிகாரி தயாரித்தல் வேண்டும்.

16. இந்தச் சுற்றறிக்கையில் அடங்கியுள்ள விடயங்களை உங்கள் திணைக்களத்திலுள்ள தகுதி வாய்ந்த எல்லா உத்தியோகத்தர்களுக்கும் அறியத் தருக.

17. இந்தச் சுற்றறிக்கையானது பொதுத் திறைசேரியின் சம்மதத்துடன் வெளியிடப்படுகிறது.

ஒப்பம். எஸ். ரீ. ஜானேட்.

தாபனப் பணிப்பாளர்.